**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)**

Cr.M.P.No. 303/2026

**சங்கரன்கோவில் டவுண் காவல் நிலைய குற்ற எண்.88/26**

**பிரிவுகள் 131, 133, 296(b), 351(2) BNS , 4 of TNPHW Act**

**உத்தரவு நாள்: 05.03.2026**

**CNR No. TNTS09-000681-2026**

1. சத்தியமூர்த்தி,
த/பெ. யோசுவன்,
2. பிச்சையா,
த/பெ. திருமலை

... மனுதாரர்கள்/எதிரிகள்

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
சங்கரன்கோவில் டவுண் காவல் நிலையம்
குற்ற எண்.88/2026

... எதிர்மனுதாரர்/வாதி

**மனுநாள்: 03.03.2026 மனு 480 BNSS**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில், மனுதாரர்கள்/எதிரிகள் 03.03.2026 முதல் காவலில் இருந்து வருவதாகவும், அவர்கள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், அவர்கள் கூலி வேலை செய்து வருபவர்கள் என்றும், அவர்கள் நிரந்த முகவரி உடையவர்கள் என்றும், அவர்கள் நீதிமன்ற நிபந்தனைக்கு கட்டுப்படுவார்கள் என்றும், எதிரிகளை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை வழங்குவதாகவும், எனவே மனுதாரர்கள்/எதிரிகளை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே மனுதாரர்கள்/எதிரிகளை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு தரப்பில், திருவேங்கடம் காவல் நிலையம் காவல் நிலைய குற்ற எண். 88/2026 வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேற்படி வழக்கின் 1-வது எதிரி மீது சங்கரன்கோவில் டவுண் காவல் நிலைய குற்ற எண். 458/2023 பிரிவுகள் 296(b), 506(2) BNS(PT) வழக்கு ஒன்று உள்ளது என்றும், 2-வது எதிரி மீது முன்வழக்கு ஏதுமில்லை என்றும்,

மேற்படி வழக்கின் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில், திரும்ப இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரி நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும், சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், எதிரிகள் தொடர்ந்து பிரச்சனைக்குரிய இடத்திற்கு சென்று வாதியுடன் பிரச்சை செய்து மீண்டும் குற்றத்தில் ஈடுபட அதிக வாய்ப்பு இருப்பதாலும், எனவே, மேற்படி எதிரிகளை ஜாமீனில் வெளியே விட கடுமையான ஆட்சேபணை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரர்கள்/எதிரியானவர்கள் 3 நாட்களாக காவலில் இருந்து வருகிறார் என்று தெரிய வருகிறது. இவ்வழக்கின் எதிரிகள் புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு தருவார்கள் என்று கருதியும், மேலும், எதிரிகளை பிணையில் விடுவது எந்த விதத்திலும் அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்று கருதியும், இந்த வழக்கின் தன்மை மற்றும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு மனுதாரர்கள்/எதிரிகளை பிணையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் விடுவிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. நிபந்தனைகள் :–

1. மனுதாரர்கள்/எதிரிகள் தாங்களும், தனி இரு நபர்களும் தலா ரூ.10,000/–த்திற்கு பிணைப்பத்திரம் இயற்றித் தரவேண்டும். மேற்குறிப்பிட்ட இரு நபர்களுள் ஒருவரேனும் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் நிரந்தர வசிப்பிடம் கொண்டவராக இருக்க வேண்டும்.
2. மனுதாரர்கள் / எதிரிகள் புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.
3. மனுதாரர்கள் / எதிரிகள் பிணையில் வெளிவந்த பிறகு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் காலை 10.00 மணி ஆஜராகி 45 நாட்களுக்கு தொடர்ந்து கையொப்பமிட வேண்டும்.

PAVITHRA G
Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.05 17:42:37 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),
சங்கரன்கோவில்.